வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.447/அ3/2024 நாள்: .02.2024

-----

பொருள்: கல்வி உதவித்தொகை – (PM YASASVI) PRE-MATRIC SCHOLARSHIP – அரசு பள்ளிகளில் முழு நேரம் பயிலும் 9 மற்றும் 10ஆம் வகுப்பு கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல் – 2022 – 2023ஆம் ஆண்டு கல்வி பயின்ற மாணவியர்களின் விவரங்களை EMIS இணையத்தில் பதிவு மேற்கொள்ள அறிவுறுத்துதல்– தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை நிலை எண். (86) பிவ. மிபவ மற்றும் சிபா நலத்துறை, நாள். 15.12.2023.
2. ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை சென்னை அவர்களின் கடித எண். D1/4101/2022 நாள். 12.01.2024.
3. ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அவர்களின் கடித எண். D1/5376/2022 நாள். 22.01.2024.
4. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்களின் காணொலிக் காட்சி நாள். 31.01.2024.
5. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களின் காணொலிக் காட்சி நாள். 01.02.2024. (Google Meet)
6. வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.எண்.என்4/28568/2023, நாள். 03.02.2024.

-----

பார்வை (6)இல் காணும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் இனத்தை சார்ந்த மாணவர்களுக்கு PM Young Achievers Scholarship Award Scheme for Vibrant India (PM YASASVI) Pre Matric Scholarship for OBC திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு பள்ளிகளில் மு-ழு நேரம் பயிலும் 9ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு கல்வி பயிலும் மாணவியர்களுக்கு மட்டும் இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

எனவே, இணைப்பில் காணும் கடித்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி தொடர்புடைய விவரங்களை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அனைத்து அரசு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், கீழ்காணும் பள்ளிகளில் இப்பொருள் தொடர்பாக நிலுவை அதிகளவில் உள்ளதால், இப்பள்ளிகளில் பயிலும் மாணவியர்களுக்கு வங்கி கணக்கு துவங்கிட வேலூர் மாவட்ட IPPB Senior Manager மற்றும் Superintendent of Post Office Vellore அவர்களால் பள்ளிகளில் முகாம் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, கீழ்காணும் பள்ளிகளில் 9 மற்றும் 10ஆம் வகுப்பு கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவியர்களுக்கு தபால் வங்கி கணக்கு துவங்கவும், சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாணவியர்களின் விவரங்களை EMIS இணையதளத்தில் பதிவு மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் செய்திடவும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் மாணவியர்களுக்கு இந்திய அஞ்சல் வங்கி கணக்கு துவங்க மாணவிர்களின் ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசி எண். (உபயோகத்தில் இருக்கும்) மற்றும் ரூ.200/– (premium account) வங்கி கணக்கு துவங்க மாணவியர்களை எடுத்து வர அறிவுறுத்துமாறு தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முகாம் நடைபெறும் நாட்கள் : 08.02.2024 மற்றும் 09.02.2024

| வ, எண், | பள்ளியின் பெயர் | அஞ்சலக அலுவலர் பெயர் (திரு/திருமதி) | கைப்பேசி எண்,. |
|---|---|---|---|
| 1 | அமேநிப, சத்துவாச்சாரி | தனலட்சுமி | 6369282899 |
| 2 | வி.கே.வி.எம். அ(பெ)மேநிப, வேலப்பாடி. | சிவலிங்கம் | 8825814114 (ம) 9442826853 |
| 3 | அ(நகரவை) (பெ) மேநிப, தோட்டப்பாளையம் வேலூர் | சுதா | 6380576514 |
| 4 | அ(பெ)மேநிப, காட்பாடி | புருஷோத்தமன் | 9894466980 |
| 5 | அ(பெ)மேநிப, ஊசூர் | சுஜாதா | 9597460059 |

இணைப்பு:

1. பார்வை 6இல் காணும் கடித நகல்
2. நிலுவை பள்ளிகளின் விவரப்பட்டியல்

//ஒப்பம் //

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்
அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.